





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2019

*We Are Here..!! To Guide You..!!*







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## மார்ச் - 27.03.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்












# இந்திய நிகழ்வுகள்

- இந்திய விமானப்படையில், புதிய வகை **CH47F(I)** என்ற **"சினூக் ஹெலிகாப்டர்கள்"** இணைத்துக் கொள்ளப்பட்டது. இந்த சினூக் ரக இராணுவ ஹெலிகாப்டர்களை இந்தியா, அமெரிக்காவின் போயிங் நிறுவனத்தினடமிருந்து வாங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கடந்த **செப்டம்பர் 2015ல்** கையெழுத்தாகியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கடந்த செப்டம்பர் 2015ல் கையெழுத்தாகியுள்ளது.
    - இராணுவத்தில் பயன்படுத்தப்படும் சிறிய ரக பீரங்கிகள், தளவாடங்கள், எரிபொருள் ஆகியவற்றை, எடுத்துச் செல்வதற்கும் பேரிடர் மீட்பு பணிகளுக்கு இந்த ஹெலிகாப்டர்கள் பயன்படும்.
    - 4 சினூக் ரக ஹெலிகாப்டர்களை முதற்கட்டமாக சண்டிகரின் விமானப்படை தளத்தில் இந்திய விமானப்படை தளபதி **பி.எஸ். தனௌா** அறிமுகம் செய்துள்ளார்.

- மத்திய இடைநிலைக் கல்வி வாரியமானது (**CBSE**) இணைய வாயிலாக பயன்படுத்தக்கூடிய சிக்சாவானி (**Shikshavani**) எனும் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இது சரியான நேரத்தில் மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு முக்கியமான தகவல்களைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# உலக நிகழ்வுகள்

- **சீனாவின்** உலகளாவிய கட்டுமான திட்டமான **"Belt Road Initiative"** (BRI) திட்டத்தில் இணைவதற்கு **"இத்தாலி" நாடு ஒப்புதல்** அளித்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தாகி உள்ளது.
    - G7 நாடுகளில் இருந்து Belt Road Initiative திட்டத்தில் இணையும் முதலாவது நாடு இத்தாலி ஆகும்.

# விளையாட்டு நிகழ்வுகள்

- மஸ்கட் நகரில் நடைபெற்ற 2019ம் ஆண்டிற்கான ஓமன் ஓபன் டேபிள் டென்னிஸ் போட்டியின் 21 வயதுக்குட்பட்டோருக்கான

பெண்கள் ஒற்றையர் போட்டியில் இந்தியாவின் **"அர்ச்சனா காமத்" வெள்ளிப்பதக்கம்** வென்றுள்ளார்.

- இப்போட்டியில் ஜப்பானின் **சாட்சுகி ஓடோ தங்கம்** வென்றுள்ளார்.
- ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரரான தமிழகத்தை சேர்ந்த **சத்யன் ஞானசேகரன் வெண்கலப் பதக்கம்** வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- இத்தாலி விண்வெளி மையத்திற்**காக ஐரோப்பாவின் வேகா விண்கலமானது** பிரிஸ்மா (**PRISMA**) என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய புவிக் கண்காணிப்பு செயற்கைக் கோளை அதன் சுற்றுவட்டப் பாதைக்கு சுமந்து சென்றுள்ளது.
  - இந்தச் செயற்கைக் கோளானது **சூரிய ஒத்தியக்கச் சுற்றுவட்டப் பாதையில் செயல்பட உள்ளது.**

## விருதுகள்

- **பாகிஸ்தான் நாட்டின் தேசிய நாள் விழா** (23.03.19) கொண்டாட்ட விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற **"மலேசிய பிரதமர் மஹதிர் முகம்மது"** அவர்களுக்கு பாகிஸ்தான் நாட்டின் குடிமக்களுக்கு அளிக்கப்படும் **"நிஷான்-இ-பாகிஸ்தானி"** எனப்படும் மிக உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.
  - இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா மற்றும் பாகிஸ்தானின் உயரிய விருதான நிஷான்-இ-பாகிஸ்தானி ஆகிய இரண்டு விருதுகளையும் பெற்ற இந்தியர் **மொராஜி தேசாய்** ஆவார்.

- **2018ம்** ஆண்டிற்கான **"வியாஸ் சம்மன்"** விருதானது, இந்தி எழுத்தாளர் **"லீலாதார் ஜகுதி"** (Leeladhar Jagudi) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - கே.கே. பிர்லா அறக்கட்டளையால் **"ஜித்னே லோக் உட்னி பிரேம்"** கவிதைகள் தொகுப்பிற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

- **சர்வதேச சாதனையாளர்கள் தினம் - மார்ச் 24** (International Day for Achievers)
    - ஏதாவது ஒரு துறையில் தலைசிறந்த சாதனைகளை நிகழ்த்திய சாதனையாளர்களை கௌரவிப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் **மார்ச் 24ம் தேதி சர்வதேச சாதனையாளர்கள் தினமாக** கடைபிடிக்கப்படுகிறது.
    - உலக காசநோய் தினம் இதே நாளில் கடைபிடிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy™